**செ. கு. எண்**: 172 **நாள்**:09.05.2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 9.5.2012

விருதுநகர் மாவட்டம், சென்னல்குடி கிராமம், அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயிலில் 9.5.2012 அன்று நடைபெற்ற திருவிழாவில் சுவாமி கருடவாகனத்தில் வெளி புறப்பாட்டிற்குப் பின், பொட்டல்பட்டியிலிருந்து சென்னல்குடிக்கு திரும்பும் போது, சப்பரத்தின் மேல் பகுதியில் மின்சாரம் பாய்ந்ததில், சப்பரத்தைத் தூக்கி வந்த பொட்டல்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்துராஜ் என்பவரின் மகன் திரு. அழகு ராஜா, செந்நெல்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரிமுத்து என்பவரின் மகன் திரு. மாரீஸ்வரன் மற்றும் அதே கிராமத்தைச் சேர்ந்த திரு. கண்ணன் என்பவரின் மகன் திரு. கார்மேகன் ஆகியோர் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் காலமான அழகு ராஜா, மாரீஸ்வரன் மற்றும் கார்மேகன் ஆகியோரின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**